கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 30.12.2018

# 30.12.2018ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

<table>
<tr><th>வ.எண்</th><th>பொருள்கள் – டிசம்பர் 2018</th><th>தீர்மானம் எண்</th></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களில் அவ்வொப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பொருட்டு தீர்மான எண்.103, நாள்.31.07.2018–ல் அனுமதி பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சியின் வாகனம் TN.68.F.1081 வாகனத்தின் பிரண்ட் வீல் ஆக்ஸில் மற்றும் டோசர் டிரைவிங் சீட் உடைந்து இயக்க முடியாமல் இருந்தமையால் இந்த வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட எம்.எம்.மோட்டார்ஸ், கும்பகோணம் விநியோகஸ்தரின் விலைப்புள்ளி ரூ.9889/– பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.221<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>2.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு பணியினை கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக கொசுபுகை தெளிக்கும் பழுதடைந்த எந்திரத்தினை பழுது நீக்கம் செய்யும் பொருட்டு, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>N.Realtech India (P) Ltd.,<br>51.Nethaji NagarÏ Shathuvachari, Vellore.9</td><td>2,02,000/-<br>+S.T 12%</td></tr>
<tr><td>2.</td><td>Sri Maruti Metal Craft<br>3/5, Ganga Nagar, MMDA<br>MaduravoyilÏ Chennai.95</td><td>2,17,000/-<br>+S.T 12%</td></tr>
<tr><td>3.</td><td>Sri Muruga Enterprises<br>43/13, Pillaiyar Koil Street<br>Gandhi Pettai, Thirupattur. 635 601</td><td>2,08,000/-<br>+ 12% S.T</td></tr>
</table></td><td>தீர்மான எண்.222<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>3.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.P.8505 வாகனத்தின் மின்கலம் பழுதடைந்துள்ளதால், அவ்வாகனத்திற்கு புதிய மின்கலம் வாங்கி பொருத்தும் பொருட்டு தீர்மான எண்.142, நாள்.27.09.2018ல் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீஅம்மன் பேட்டரி ஒர்க்ஸ்<br>14ஏ, பிடாரிகுளம் ரோடு,கும்பகோணம்</td><td>8700/–</td></tr>
<tr><td>2.</td><td>வீனஸ் பேட்டரி சர்வீஸ்<br>51–பி, பாணாதுறை தெற்குவீதி<br>கும்பகோணம்</td><td>9700/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.223<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>4.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.P.8505 வாகனத்திற்கான டயர், டியூப்–6 எண்ணிக்கை வாங்கும்பொருட்டு தீர்மான எண்.141, நாள்.27.09.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>KBR டயர்ஸ்<br>12பி, நீடாமங்கலம் ரோடு, கும்பகோணம்</td><td>84400/–</td></tr>
<tr><td>2.</td><td>Sana டயர்ஸ்<br>63ஏ, தஞ்சாவூர் ரோடு,<br>கும்பகோணம்</td><td>87000/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.224<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>5.</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.P.8505 பழுது நீக்கம் செய்து தகுதிசான்று பெறும் பணிக்கு தீர்மான எண்.151, நாள்.27.09.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தனலெட்சுமி நகர்,<br>மயிலாடுதுறை மெயின்ரோடு,<br>கும்பகோணம்</td><td>93692/–</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13, ராம்கே நகர்,<br>சங்கம் தியேட்டர் எதிரில்<br>திருவாரூர்</td><td>108206</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.225<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>6.</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.AX.2900 வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறும் பணிக்கு தீர்மான எண்.153, நாள்.27.09.2018 அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை மெயின்ரோடு, கும்பகோணம்</td><td>59354/–</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13, ராம்கே நகர், சங்கம் தியேட்டர் எதிரில், திருவாரூர்</td><td>65844/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.226<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>7.</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.AX.1275 வாகனத்தின் பழுதுகளை நீக்கி தகுதிசான்று பெறும்பொருட்டு தீர்மான எண்.147, நாள்.27.09.2018 அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை மெயின்ரோடு, கும்பகோணம்</td><td>69974/–</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13, ராம்கே நகர், சங்கம் தியேட்டர் எதிரில், திருவாரூர்</td><td>80535/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.227<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>8.</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.3850 வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்து தகுதிசான்று பெறும் பணியை மேற்கொள்ள தீர்மான எண்.152, நாள்.27.09.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.228<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை மெயின்ரோடு, கும்பகோணம்</td><td>59118/–</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13, ராம்கே நகர், சங்கம் தியேட்டர் எதிரில் திருவாரூர்</td><td>63543/–</td></tr>
</table>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>9.</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.P.8526 வாகனத்திற்கான தகுதிசான்று பெறும்பணி மேற்கொள்ள தீர்மான எண்.150, நாள்.27.09.2018ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனிஅலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தனலெட்சுமி நகர்,<br>மயிலாடுதுறை மெயின்ரோடு,<br>கும்பகோணம்</td><td>79502/–</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13, ராம்கே நகர், சங்கம் தியேட்டர் எதிரில்<br>திருவாரூர்</td><td>89385/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.229<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>10.</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.1698 வாகனத்தின் தகுதிசான்று பெறும் பணிக்கு தீர்மான எண்.149, நாள்.27.09.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>தனலெட்சுமி நகர்,<br>மயிலாடுதுறை மெயின்ரோடு, கும்பகோணம்</td><td>73927/–</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13, ராம்கே நகர்,<br>சங்கம் தியேட்டர் எதிரில், திருவாரூர்</td><td>85373/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.230<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>11.</td>
<td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்படும் ஆணையர் பயன்பாட்டில் உள்ள வாகனம் TN.68.U.1116–க்கு சர்வீஸ் செய்துக்கொள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ், மருதாநல்லூர், நீடாமங்கலம் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஒரு விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1.</td><td>சிவா ஆட்டோ மொபைல்ஸ்<br>மருதாநல்லூர்</td><td>ரூ.41228/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.231<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>12.</td>
<td>இந்நகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கிவரும் வலையப்பேட்டை நீருந்து நிலைய 320 கே.வி.ஏ ஜெனரேட்டர் பழுது நீக்கும் பணிக்கு அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s.Raju Electricals</td><td>மதிப்பீடை விட 0.09% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Ramu Electricals</td><td>மதிப்பீட்டை விட 1.10% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.232<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td>13.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையாக மாடுகளை கோசாலையில் சேர்க்கும்பொருட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாடகைக்கு லாரி அமர்த்தும் பொருட்டு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் தனிஅலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>கோடீஸ்வரா டிரான்ஸ்போர்ட்&பார்சல் சர்வீஸ்<br>காசிவிஸ்வநாதர் வடக்குவீதி, கும்பகோணம்</td><td>4000/–</td></tr>
<tr><td>2.</td><td>ரஞ்சித் டிரான்ஸ்போர்ட் & பார்சல் சர்வீஸ்<br>எல்பிஎஸ் ரோடு, கும்பகோணம்</td><td>4300/–</td></tr>
<tr><td>3.</td><td>R.M.S டிரான்ஸ்போர்ட் பார்சல் சர்வீஸ்<br>இந்திராகாந்தி சாலை, கும்பகோணம்</td><td>4200/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.233<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>14.</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தேப்பெருமாநல்லூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தவேண்டிய இசைவாணை கட்டணம் 2017–18 மற்றும் 2018–19 ஆகிய ஆண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு செலுத்த தஞ்சாவூர் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் கடிதம் நடவடிக்கை குறிப்பாணை எண்.0012 மாசுகூபொ/தநாமாசுவா/ தஞ்சை / நீர் / 2018 நாள்.04.10.2018
<table>
<tr><th>Fees</th><th>Arrear year demand 2017-2018</th><th>Current year demand 2018-2019</th><th>Already paid</th><th>Balance to be paid</th></tr>
<tr><td>Consent Fees</td><td>54415</td><td>81622</td><td>0</td><td>136037</td></tr>
</table></td><td>தீர்மான எண்.234<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>15.</td><td>தூய்மை இந்தியா இயக்கம் 2018–19–ன்கீழ் இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 2 கன மீட்டர் கொள்ளளவு திறனுள்ள 9 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் சப்ளை செய்யும் பணிக்கு 12.9.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி Offline–ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், Online–ல் ஒரு ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெற்றன.<br><br><u>Offline–ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்.</u><br>1) Sakthi Body Works.<br>46, Poonamallee Bye-Pass Road,<br>(Opp. MTC Bus Depot),<br>Poonamallee,<br>Chennaim 56<br>2) Krysttal Motors (P) Ltd.,<br>39/2, M.M.Brothers Thottam,<br>Telcon Company Back side,<br>Kanthampatty Bye Pass, Salem-636 005<br><br><u>Online–ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்</u><br>3) Sakthi Body Works.<br>46, Poonamallee Bye-Pass Road,<br>(Opp. MTC Bus Depot),<br>Poonamallee,<br>Chennaim 56<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூர்ந்தாய்வு செய்ததில் Technically Qualified<br>தகுதி பெற்ற கீழ்க்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.</td><td>தீர்மான எண்.235<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின் படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Krysttal Motors (P) Ltd., 39/2, M.M.Brothers Thottam, Telcon Company Back side, Kanthampatty Bye Pass, Salem-636 005 | **5040000** | **4989600** | மதிப்பீட்டை விட **1.00** சதவிகிதம் குறைவு (GST உட்பட) |

16.

**தீர்மான எண்.236**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

தூய்மை இந்தியா இயக்கம் **2018–19**–ன்கீழ் இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக **12** எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் சப்ளை செய்யும் பணிக்கு **12.9.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி Offline–ல் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும், Online–ல் நான்கு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்றன.

**Offline–ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்.**

1) Encon Engineers,
VRK Complex. No.3, Ist Floor,
Vadavalli, Coimbatore-641041
2) Neptune Automation,
254. Arunachala Gounder Thottam,
Veerappan Palayam Bye Pass, Erode-638 012.
3) Priyam Industries and Engineering Pvt. Ltd.
625, Surya Complex. 2nd floor,
Anna Salai,. Chennai.600 006.

**Online–ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்**

4) Encon Engineers,
VRK Complex. No.3, Ist Floor,
Vadavalli, Coimbatore-641041
5) Priyam Industries and Engineering Pvt. Ltd.
625, Surya Complex. 2nd floor,
Anna Salai,. Chennai.600 006.
6) Prevalence Green Solutions,
44/3, 1st Cross. BK Circle,
SOS Post. Kothanur Dinne, Bannergatta Road,
Bangalore-560076.
7) Shuttle Cars India Pvt. Ltd.,

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூர்ந்தாய்வு செய்ததில் Technically Qualified
தகுதி பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Encon Engineers, VRK Complex. No.3, Ist Floor, Vadavalli, Coimbatore-641041 | **2160000** | **2154000** | மதிப்பீட்டை விட **0.28** சதவிகிதம் குறைவு (GST உட்பட) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2. | Neptune Automation, 254. Arunachala Gounder Thottam, Veerappan Palayam Bye Pass, Erode-638 012 | 2160000 | 2133600 | மதிப்பீட்டை விட **1.22** சதவிகிதம் குறைவு (GST உட்பட) | |

| | | |
|---|---|---|
| 17. | AMRUT 2015-16 திட்டத்தின் கீழ் ரூ.217.45 இலட்சம் மதிப்பீட்டில் செந்தில்நாதன் நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை நகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பராமரிக்க அனுமதி வழங்கக் கோரி கும்பகோணம் கிழக்கு ரோட்டரி சங்கம் செயலர் அவர்களின் **01.03.2018**ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் **31.10.2018** அன்று திறந்துவைக்கப் பட்டது. செந்தில்நாதன் நகர் பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை பராமரிக்க கும்பகோணம் கிழக்கு ரோட்டரி சங்கம் நிர்வாகத்திற்கு கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு அனுமதி வழங்க மன்றத்தின் முடிவுக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>செந்தில்நாதன் நகரில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை பராமரிப்பதற்கான நிபந்தனைகள்.</u>**<br>1. அம்ரூட் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள செந்தில்நாதன் நகர் பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.<br>2. பூபந்து / இறகு பந்து விளையாட்டினைத் தவிர வேறு எந்த காரியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் உள்விளையாட்டு அரங்கத்தினை பயன்படுத்தக் கூடாது. எந்த சட்ட விரோத மற்றும் தனியார் நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்க இயலாது<br>3. ஒளி, ஒலி பெருக்கிகளை பயன்படுத்தக் கூடாது. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணைய அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.<br>4. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தில் உள்ள பொருட்கள் ஏதேனும் சேதப்படுத்தப்பட்டாலோ, களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் நகராட்சி சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழு பொறுப்பாகும்.<br>5. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்க மின் கட்டணத்தை பராமரிக்கும் நிறுவனமே மின் வாரியத்திற்கு மாதந்தோறும் செலுத்த வேண்டும்.<br>6. பூங்கா பராமரிப்பு மற்றும் உள் விளையாட்டு அரங்க அன்றாட பராமரிப்பு செலவினங்களை ஈடுசெய்து கொள்ளும் வகையில் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் தொகையான முன் பணம் ரூ.1,000/– மற்றும் மாதாந்திர கட்டணத் தொகை ஒரு நபருக்கு ரூ.500/– மட்டுமே பெற்று இதற்கென தனியே ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் பராமரிக்க வேண்டும்.<br>7. சாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை பயன்படுத்திட வேண்டும்.<br>8. 24 மணி நேரமும் பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்க பாதுகாப்பிற்காக போதிய அளவு காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.<br>9. பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இலவசமாக காலையில் 5.30 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலையில் 4.00 மணி முதல் 8.30 மணி வரையிலும் செயல்பட வேண்டும்.<br>10. உள் விளையாட்டு அரங்கத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக காலையில் 5.30 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலையில் 4.00 மணி முதல் 8.30 மணி வரையிலும் செயல்பட வேண்டும்.<br>11. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தில் ஏற்படும் பழுதுகளை பராமரிப்பு நிறுவனமே நகராட்சி முன் அனுமதி பெற்று தங்களது சொந்த செலவில் நகராட்சி பொறியாளர்கள் முன்னிலையில் செய்ய வேண்டும்.<br>12. பூங்காவில் உள்ள நீரூற்று தினசரி காலை மற்றும் மாலை இருவேளையும் | **தீர்மான எண்.237**<br>அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கட்டாயம் இயக்கப்பட வேண்டும்.<br>13. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்க வளாகத்தில் பராமரிப்பு நிறுவனம் மூலமாக எவ்வித கூரை வேய்ந்த கட்டிடமோ, மற்றும் எளிதில் தீ பற்றக் கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கக் கூடாது.<br>14. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்க பராமரிப்பு தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சணைகளுக்கு நிறுவனமே முழு பொறுப்பேற்க வேண்டும்.<br>15. முதன் முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு மட்டுமே பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கம் பராமரிக்க ஒப்படைக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் 3 மாத காலத்திற்கு முன்பாகவே சம்மந்தப்பட்ட நிறுவனம் விண்ணப்பிக்க வேண்டும்.<br>16. பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் வசதிகள் ஏதேனும் தேவைப்படின் உள்ளாட்சியின் முன் அனுமதி பெற்றே வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும்போது இதற்கு எந்தவித இழப்பீடும் நகராட்சி வழங்காது.<br>17. நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக்கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு 6 மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்கப்பட வேண்டும்.<br>18. பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் நகராட்சியின் முடிவைப் பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் தங்கள் நிறுவனம் ஏற்படுத்திய கூடுதல் வசதிகள் தொடர்பாக எந்தவித இழப்பீடும் கோராமல் நகராட்சிக்கு நிறுவனத்தினர் ஒப்படைக்க வேண்டும்.<br>19. பூங்கா மற்றும் உள் விளையாட்டு அரங்கத்தினை பயன்படுத்துவோர் குறித்து முழு விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். நகராட்சி அலுவலர்கள் ஆய்வுக்கு வரும்போது கண்டிப்பாக காண்பிக்க வேண்டும்.<br>20. மேற்கண்ட நிபந்தனைகளில் எந்தவொரு நிபந்தனையாவது மீறப்பட்டாலோ, புகார் நிரூபிக்கப்பட்டாலோ வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும். எவ்வித நஷ்ட ஈடும் கோராமல் உள் விளையாட்டு அரங்கத்தினை இயக்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.<br>21. பூங்கா மற்றும் உள் விளையாட்டரங்கம் திறக்கப்பட்டிருக்கும் நேரம் மற்றும் பயன்படுத்துவோர் கட்டண விவரங்களை பெயர்ப் பலகையில் அனைவருக்கும் தெரியும்படி இரண்டு வாயில்களிலும் (Entrance) வைக்கப்பட வேண்டும்.<br>22. பூங்கா மற்றும் உள் விளையாட்டரங்கினை பராமரிக்க தோட்டக்காரர், துப்புரவுப் பணியாளர்கள், பாதுகாவலர் ஆகியோரை நியமித்து அவர்களுக்கான ஊதியம், EPF, ESI மற்றும் அரசு அறிவித்துள்ள பிற செலவினங்களை பராமரிக்கும் நிறுவனமே செலுத்த வேண்டும்.<br>23. பூங்கா பராமரிப்பதற்காக வசூலிக்கப்படும் தொகை "Rotary Club of Kumbakonam East Charitable trust" என்னும் Trust–ன் மூலமே வசூலிக்கப்பட வேண்டும்.<br>24. பூங்கா பராமரிக்கும் சம்பள வரவு செலவினை ஆண்டுதோறும் Audit Report நகராட்சியிடம் கொடுக்க வேண்டும். | |
| 18. | இந்நகராட்சியில் **45** இடங்களில் உயர் தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) நிறுவ நகர் மன்ற தீர்மானம் எண் **207** நாள் **30.11.2018**ல் தீர்மானித்ததன்படி நகரில் 45 இடங்களில் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிக குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையம் (Automatic Vending Center) அமைக்க திட்டத்தினை வடிவமைத்து, முதலீடு செய்து, நிர்மாணித்து இயக்கி பராமரிக்கும் பணியினை 10 ஆண்டுகளுக்கு DBFOT முறையில் முதலீடு செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் நகராட்சிக்கு பங்கு கொடுக்க (PPP Mode) முன் வரும் பணிக்கு விருப்ப மனுக்கள் கோரும் **16.10.2018** அன்று நடைபெற்ற முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரப்பெறவில்லை. இரண்டாம் முறையாக **29.11.2018** அன்று விருப்ப மனுக்கள் (Expression of Interest) கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து Online மூலம் விருப்ப மனுக்கள் பெறப்பட்டன | **தீர்மான எண்.238**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1 | Water life India Pvt., Ltd.,<br>Plot No.12/2, Sector I, Royal Demeure,<br>HUDA TECHNO ENCLAVE, Madhapur,<br>Hydrabad. |
| 2 | Dharana Infrastructure Projects Pvt., Ltd.,<br>AP 887, J Block 1st Street,<br>13th Main Road,<br>Anna Nagar, Chennai – 600 041. |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Hydrabad, Water life India Pvt., Ltd., நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத் தொகை செலுத்தவில்லை. Chennai, Dharana Infrastructure Projects Pvt., Ltd., நிறுவனத்தினர் கீழ்க்கண்டவாறு விருப்ப மனுக்கள் (Expression of Interest) கொடுத்துள்ளனர்.

| Price Bid | Rate to be remitted to Municipality (Rs/ as per 20 Ltr.) | Rate to be charged for sale to Public (Rs/ as per 20 Ltr.) |
|---|---|---|
| Establishment of 1000 Ltr/Hr.capacity Community Drinking water system through Reverse Osmosis with UV treatment in 45 Places in Kumbakonam Municipality. | Rs.1.00/20 Liters sold @ Plant site | Rs.6.90/- at Plant site |
| | Rs.2.00/20 Liters sold at the Door Step | Rs.20.00 at door step |
| | 10 Paise for 1 Litre water sold on vending machine | Re.1 for water sold from vending machine (chilled or non chilled) |

19\. தூய்மை இந்தியா குழுமம் 2018–19 ன்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை கடிதம் ந.க. எண் 22866/ப்பி3/2018, நாள் 23.08.2018–ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதன்பேரில் நகர் மன்றம் தனது 27.9.2018. ம் தேதிய தீர்மானம் எண்.175–ல் மொத்தம் 7 பணிகளை ரூ.330.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், இத்திட்டப் பணிகளுக்கான நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.33.07 இலட்சத்தினை நகராட்சி நிதியிலிருந்து செலவிடவும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.7, பெரிய தம்பி நகரில் 3 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி | 52.00 |
| 2 | வார்டு எண்.12, சோலையப்பன் தெருவில் 4 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி அமைக்கும் பணி | 52.50 |
| 3 | வார்டு எண்.15, அறிஞர் அண்ணா தினசரி மார்க்கெட் வளாகத்தில் புதிய 5 TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி அமைக்கும் பணி | 64.20 |
| 4 | வார்டு எண்.21, பாணாதுறை பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலைய வளாகத்தில் 4 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி | 45.00 |

**தீர்மான எண்.239**
அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 5 | வார்டு எண்.24, பாரத் நகர் பாதாள சாக்கடை லிப்டிங் ஸ்டேஷன் வளாகத்தில் 4 TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி | 45.00 |
| 6 | 12 எண்ணிக்கைகள் பேட்டரியால் இயங்கும் புதிய வாகனங்கள் சப்ளை செய்யும் பணி | 21.60 |
| 7 | 2 கன மீட்டர் கொள்ளளவு திறனுள்ள 9 எண்ணிக்கைகள் புதிய இலகு ரக வாகனங்கள் சப்ளை செய்யும் பணி | 50.40 |
| | **மொத்தம்** | **330.70** |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் **24.9.2018**–ம் தேதிய ந.க.எண்.**38984/2014**/P1 கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற இத்திட்டத்திற்கான **13.8.2018** அன்று அரசு முதன்மைச் செயலர் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களது தலைமையில் **7**வது உயர்மட்ட குழு கூட்ட நிகழ்ச்சி குறிப்புகளின்படி தூய்மை இந்தியா குழுமம் **2018–19** ன்கீழ் இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

A) Decentralised Micro Composting Centre (Annexure-3)

| MCC Capacity | No. | Core Infrastructure cost | Other Infrastructures (Road / Compound W |
|---|---|---|---|
| 5 Tonne | 1 | 60.00 | 4.20 |
| 4 Tonne | 3 | 135.00 | 7.50 |
| 3 Tonne | 1 | 35.00 | 12.00` |
| | | | **Sub total (1)** |

B) Purchase of Battery Operated Vehicle & Light Commercial Vehicle (Annexure-4)

| Battery Operated Vehicle | | Light Commercial Vehicle | |
|---|---|---|---|
| No. | Amount | No. | Amount |
| 21 | 37.80 | 6 | 33.60 |
| | | | Sub Total (2) |
| | | | **Grand Total** |

1) வார்டு எண்.**7**, பெரிய தம்பி நகரில் **3** TPD கொள்ளளவு கொண்ட புதிய நுண்ணுயிர் உரமாக்கும் மையம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கான அரசு நிதி ஒதுக்கீடு ரூ.**52.00** இலட்சத்திலிருந்து ரூ.**5.00** இலட்சம் குறைத்து ரூ.**47.00** இலட்சத்திற்கு தற்பொழுது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஏற்கனவே **12.9.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்ததபுள்ளிதாரர் திரு.எம்.ராஜேந்திரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**51,72,450.95** நகர் மன்ற தீர்மானம் எண்.**174** நாள் **27.9.2018**–ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி இனத்தில் சேராத Lumpsum ,இனங்களுக்கான தொகை ரூ.**2,68,940/–** யையும் சேர்த்து இப்பணிக்காகும் மொத்த செலவு ரூ.**54,41,390.95** ஆகும். ஆதலால் திட்ட ஒதுக்கீடு ரூ.**47.00** இலட்சம் போக கூடுதலாகும் செலவினம் ரூ.**7,41,390.95**–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

2) ஏற்கனவே 12 எண்ணிக்கைகள் பேட்டரியால் இயங்கும் புதிய வாகனங்கள் வாங்க அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.21.60 இலட்சத்திற்கு பதிலாக தற்பொழுது 21 வாகனங்களுக்கு திட்ட நிதியாக ரூ.37.80 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

3) ஏற்கனவே **9** எண்ணிக்கைகள் இலகுரக வாகனங்கள் வாங்க அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.**50.40** இலட்சத்திற்கு பதிலாக தற்பொழுது **6** வாகனங்களுக்கு திட்ட நிதியாக ரூ.33.60 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

20.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்குத் தேவையான குடிநீரானது நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள குடிதாங்கி கிராமத்தில் உள்ள கொள்ளிடம் ஆற்றுப் படுகையில் அமைக்கப்பட்டுள்ள Old Pumping Station மற்றும் New Collector well ஆகிய இரு நிலையங்களிலிருந்து நிரேற்றம் செய்யப்படுகிறது. அவ்வாறு நீரேற்றம் செய்யப்படும் குடிநீரானது வலையப்பேட்டை கிராமத்தில் உள்ள நீர் உந்து நிலையத்தில் (Booster Station) சேகரிக்கப்பட்டு அங்கு சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 16 எம்.எல்.டி., அளவிற்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. நகரில் அமைந்துள்ள 13 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் தினசரி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட இரண்டு நீரேற்ற நிலையங்கள் மற்றும் ஒரு நீருந்து நிலையம் ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு மின் மோட்டார்கள், பம்ப் செட்டுகள் மற்றும் அதற்கான மின் உபகரணங்கள் உள்ளன.

**I. குடிதாங்கி தலைமை நீரேற்று நிலைய புதிய Collector Well.**

| | | |
|---|---|---|
| 1 | 180 H.P. Vertical turbine மோட்டார் மற்றும் அதற்கான பேனர் போடுகள் | 2 Nos. |
| 2 | 20 H.P. நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் அதற்கான பேனல் போர்டுகள் | 3 Nos. |
| 3 | 400 KVA மின் மாற்றிகள் | 2 Nos. |
| 4 | 400 KVA ஜெனரேட்டர் | 1 No, |

**II. குடிதாங்கி தலைமை நீரேற்று நிலைய பழைய நீரேற்று நிலையம்.**

| | | |
|---|---|---|
| 1 | 75 H.P. Vertical turbine மோட்டார் மற்றும் அதற்கான பேனல் போடுகள் | 3 Nos. |
| 2 | 15 H.P. நீர் மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் அதற்கான பேனல் போர்டுகள் | 10 Nos. |
| 3 | 315 KVA மின் மாற்றிகள் | 20 Nos. |
| | 315 KVA பேனல் போர்டுகள் | 3 Nos. |
| 4 | 320 KVA ஜெனரேட்டர் | 1 No, |

**III. வலையப்பேட்டை நீருந்து நிலையம் (Booster Station).**

| | | |
|---|---|---|
| 1 | 125 H.P. Vertical turbine மோட்டார் மற்றும் அதற்கான பேனல் போடுகள் | Nos. |
| 2 | நீர் மூழ்கி மின் மோட்டார் மற்றும் அதற்கான பேனல்கள் | |
| 3 | 320 KVA ஜெனரேட்டர் | 1 No. |
| 4 | 320 KVA பேனல் போர்டுகள் | 1 No. |
| 5 | 250 KVA மின் மாற்றிகள் | 2 Nos. |
| 6 | 315 KVA மின் மாற்றிகள் | 1 No. |

மேற்கண்ட இரண்டு நீரேற்று நிலையம், ஒரு நீருந்து நிலையம் ஆகியவற்றில் உள்ள மின்மோட்டார்கள் நாள் ஒன்றுக்கு சுமார் 20 மணி நேரம் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் நகரில் கீழ்கண்ட இடங்களில் உள்ள 13 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள்

1. மேலக்காவேரி 1
2. மேலக்காவேரி 2
3. பேட்டை 1
4. பேட்டை 2
5. பேருந்து நிலையம்
6. ஸ்ரீநகர் காலனி
7. மாட்டுக்கொட்டகை (உள் தொட்டி)
8. மாட்டுக் கொட்டகை (வெளித் தொட்டி)
9. காமராஜர் மார்க்கெட்
10. மணிக்கூண்டு
11. இளங்கா நகர்

**தீர்மான எண்.240**
அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | 12. ஏ.ஆர்.ஆர். ரோடு<br>13. சீனிவாசா நகர்<br>மேற்படி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளின் வால்வு திறப்பாளர்கள் (13 x 2) = 26 நபர்கள் தேவைப்படுகிறார்கள்.<br>மேலும், இரண்டு நீரேற்று நிலையங்கள், ஒரு நீருந்து நிலையங்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படியான பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.<br>**I. குடிதாங்கி தலைமை நீரேற்று நிலைய புதிய Collector Well.**<br>(i) எலட்ரிசியன் ITI with "C" Licence - 1 No.<br>(ii) எலட்ரிசியன் ITI - 6 Nos.<br>(iii) சுத்திகரிப்பாளர் – 9 Nos.<br>மேற்குறிப்பிட்ட நீருந்து நிலையம், நீரேற்று நிலையம் ஆகியவற்றின் மின் மோட்டார்கள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளின் வால்வுகளை இயக்குவதற்கும் போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும் தனியார் மூலம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணியாளர்களை நியமித்து குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வது போன்று 2018–19 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.<br>**II. குடிதாங்கி தலைமை நீரேற்று நிலைய பழைய நீரேற்று நிலையம்.**<br>(i) எலட்ரிசியன் ITI with "C" Licence - 1 No.<br>(ii) எலட்ரிசியன் ITI - 2 Nos.<br>(iii) சுத்திகரிப்பாளர் – 3 Nos.<br>**III. வலையப்பேட்டை நீருந்து நிலையம் (Booster Station).**<br>(i) எலட்ரிசியன் ITI - 2 Nos.<br>(ii) சுத்திகரிப்பாளர் – 3 Nos.<br>தற்பொழுது தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் (ESCO) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களையும் ஏற்கனவே குடிநீர் பிரிவில் பணிபுரிந்து வரும் பணியாளர்களையும் கணக்கில் கொண்டது போக கீழ்க்கண்ட பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.<br>(i) எலட்ரிசியன் ITI with "C" Licence - 1 No.<br>(ii) எலட்ரிசியன் ITI தகுதி - 3 Nos.<br>(iii) சுத்திகரிப்பாளர் – 3 Nos.<br>(iv) வால்வு திறப்பாளர்கள் – 26 Nos.<br>மேற்கண்ட பணியாளர்களை 2018–19 ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெற்று தனியார் மூலம் குடிநீர் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி ஆண்டு ஒன்றுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4,70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| 21. | இந்நகராட்சியில் LED விளக்குகள் 4272, SVL விளக்குகள் 751இ MHL விளக்குகள் 487 மொத்தம் 5510 தெருவிளக்குகளை சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், சென்னை, நிறுவனத்தார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது மக்களின் கோரிக்கையின் போதிய அளவு மின் விளக்குகள் அல்லாத இடங்கள் கண்டறியப்பட்டு கூடுதலாக 20 W LED மின் விளக்குகள் 206 எண்ணம் அமைத்திடவும், இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.13,18,400/–க்கு மனறத்தின் அனுமதிக்கு. | **தீர்மான எண்.241**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 22. | கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.40, மகாமகக்குளம் மேல்கரையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பயணியர் விடுதி (Dormitory Building) கட்டிடத்தின் பராமரிப்பு பொறுப்புகளை ஏற்று கட்டிடத்திலுள்ள அறைகளை வாடகைக்கு விட்டு மற்றும் தரைத்தளத்தில் சிற்றுண்டி விடுதிக்கான கூடுதல் வசதிகளை சொந்த செலவில் மேற்கொண்டு சிற்றுண்டி விடுதி நடத்திக்கொள்ளும் உரிமம் இந்நகர்மன்றத்தால் 25.05.2015ந் தேதிய தீர்மான எண்.995ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு அறை வாடகையை வசூலிக்கவும் வசூலிக்கப்பட்டுள்ள தொகையில் நகராட்சியுடன் பகிர்ந்து கொள்ளும் உரிமத்தினை கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கும், | **தீர்மான எண்.242**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.WP(MD) No.24206/2018 மற்றும் WMP(MD) No.21891, 21892 / 2018 உத்திரவு நாள். **20.12.2018** மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| **உரிம இனம்** | **பொறுப்புத் தொகை ரூ** | **தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ.** | **சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிடில் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.** |
|---|---|---|---|
| பயணியர் விடுதி கட்டிடம் வார்டு எண்.40, மகாமககுளம் மேல்கரை, கும்பகோணம் | 2,00,000 | 5,00,000 | 2,00,000 |

<u>**நிபந்தனைகள்**</u>

1. கட்டிடத்திலுள்ள அறைகளை வாடகைக்கு விட்டு பெறப்படும் வருமானத்தின் சதவீத தொகையினை நகராட்சிக்கு செலுத்த ஒப்புக்கொள்பவருக்கு உரிமம் ஒப்படைக்கப்படும்.

2.இந்த விடுதியின் தரைதளத்தில் சிற்றுண்டி விடுதி நடத்திக்கொள்ளும் உரிமம் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த சதவீதம் நகராட்சிக்கு செலுத்த ஒப்புக்கொண்டவருக்கு வழங்கப்படும். சிற்றுண்டி விடுதிக்காக தேவைப்படும் கூடுதல் வசதிகளை அவரே தனது சொந்த செலவிலும், பொறுப்பிலும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

3.28.05.2015ந் தேதிய இந்நகர்மன்ற தீர்மான எண்.995ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை மட்டுமே வசூலிக்க வேண்டும்.

4. பயணியர் விடுதி ஒதுக்கீடு **ஆன்–லைனில்** மட்டுமே செய்யப்பட வேண்டும். இதற்கான வசதிகளை உரிமதாரரே தன் சொந்த செலவில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. பயணியர் விடுதியில் கூடுதல் வசதிகளான குளிர்சாதன வசதி, திரைச்சீலைகள் அமைத்தல், கட்டில் உட்பட அறைகலன்கள் (Furniture) வசதி, மெத்தை, தலையணை, படுக்கை விரிப்புகள் மற்றும் அலங்கார வேலைப்பாடுகளை உரிமதாரர் தன் சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.

6. கட்டிடத்தில் எவ்வித மராமத்து பணிகள் செய்ய வேண்டும் என்றாலும், அனுமதிகோரி நகராட்சியின் உத்திரவு பெறப்பட்ட பின்னரே செயல்படுத்த வேண்டும்.

7.மேற்படி கட்டிடத்திற்குரிய மின் கட்டணம், இதர வரியினங்கள் போன்ற அனைத்தையும் உரிமம் பெற்றவரே செலுத்த வேண்டும்.

8. மேற்படி கட்டிடத்தின் பராமரிப்பு பணி, சுகாதாரப்பணி ஆகியவைகளுக்கு உரிமதாரரே பொறுப்பாவார்.

9. ஒவ்வொரு நாளும் வசூலில் நகராட்சிக்குரிய பங்குத்தொகையினை மறுநாள் நகராட்சி அலுவலகத்திலுள்ள கணினி வரி வசூல் மையத்தில் செலுத்த வேண்டும்.

10. தங்கும் விடுதி நடத்திட முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

11. உயர்ந்தபட்ச ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரும் நபர் தங்கும் விடுதிக்கான வசதிகளை தனியார் விடுதிக்கு நிகரான அனைத்து தரத்துடனும் வசதிகளுடனும் செய்ய வேண்டும்.

12. பகிரங்கப் பொது ஏலத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிக்கும் தனித்தனியே வைப்புத்தொகை ஏலத்திற்கு முதல் நாள் செலுத்தப்பட வேண்டும்.

13. குறைந்தது மூன்று ஆண்டு காலம் தங்கும் விடுதி நடத்திய அனுபசான்று இணைக்க வேண்டும்.

14. சொத்து மதிப்பு சான்றிதழ் (Solvency Certificate ) சமர்ப்பிக்காதவர்கள் பொறுப்புத்தொகை, கூடுதல் பொறுப்புத் தொகையை பொது ஏலத்திற்கும்,

ஒப்பந்தப்புள்ளிக்கும் தனித்தனியே ஏலம் நடைபெறுவதற்கு முதல் நாள் அரசுடமையாக்கப்பட்ட வங்கியிலிருந்து வரைவோலைகள் சமர்பித்து ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

15. ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் நகராட்சியில் இதற்கு முன் ஏலம்/கடை நடத்தி பாக்கி இல்லை (உரிமத்தொகை, வருவமான வரி, ஜி.எஸ்.டி.தொகை உள்பட) என்பதற்கான சான்றும், வரி பாக்கி ஏதுமில்லை என சான்றும் தனித்தனியே ஏலத்திற்கு முதல்நாள் சமர்பிக்க வேண்டும்.

16. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் வருமான வரி நிரந்தரக்கணக்கு, எண்ணுக்கான (Pan Card ) புகைப்பட பிரதி, ஆதார் அடையாள அட்டை, புகைப்படப்பிரதி ஆகியவைகளின் நகல்களை ஏலத்திற்கு முதல்நாள் அளிக்க வேண்டும்.

17. ஏலத்திலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியிலோ அதிகத்தொகை, கேட்பவர் போதுமான சொத்து மதிப்பு உடையவர் என திருப்தி ஏற்படாதபட்சத்தில் ஆணையரால் செலுத்தக்கோரும் தொகையை உடனடியாக நகராட்சி கருவூலத்தில் செலுத்திய பிறகே உரிமம் அளிப்பதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படும்.

18. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்து உயர்ந்த கேள்வி தொகை, பின் பொறுப்புத்தொகை முழுவதுமாக செலுத்திய பிறகு அனைத்து நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டு ரூ.100/– மதிப்புள்ள ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்து உரிமதாரர் தன் சொந்தப்பொறுப்பில் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்த பின்னரே உரிமத்தை அனுபவிப்பதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படும்.

19. நகராட்சி தங்கும் விடுதியில் (Yatri Nivas ) அசைவ உணவு பயன்படுத்தக்கூடாது. வெளியிலிருந்து அசைவ உணவு வாங்கி பயன்படுத்தக்கூடாது.

20. விடுதியில் தங்குபவர்களின் பட்டியலை தேதிவாரியாக பராமரிக்க வேண்டும்.

21. நகராட்சி தங்கும் விடுதியின் கட்டிட அமைப்பையோ அல்லது வேறு மாறுதல்களையோ நகராட்சி அனுமதியின்றி செய்யக்கூடாது.

22. தங்கும் விடுதியின் அறைகள் 24 மணி நேரத்திற்கு மட்டுமே ஒரு நாள் வாடகை நிர்ணயிக்க வேண்டும். (உதாரணமாக முதல் நாள் காலை 6.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை) அதிகபட்சமாக 3 நாட்களுக்கு மேல்வாடகைக்கு விடக்கூடாது.

23. நகராட்சி தங்கும் விடுதியின் அருகிலுள்ள உணவகத்தில் (அசைவ உணவு தயாரிப்பதோ அல்லது வெளியிலிருந்து கொண்டு வந்து சாப்பிடுவதற்கோ அனுமதிக்ககூடாது)

24. உணவகத்தில் பொருட்களின் விலைப்பட்டியல் அறிவிப்பு பலகை வைக்க வேண்டும். சுகாதாரமாக பராமரிக்க வேண்டும்.

25. தங்கும் விடுதியில் அறைகளின் வாடகை குறித்து அறிவிப்பு பலகை வைக்கப்பட வேண்டும்.

26. தங்கும் விடுதியில் அசம்பாவிதங்கள், புகார்கள் இல்லாமல் பராமரிப்பது உரிமதாரரின் முழுப்பொறுப்பாகும். இதற்கு நகராட்சி எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

27. தங்கும் விடுதி, சைவ உணவு விடுதி ஆகியவற்றி புகார் மற்றும் ஆய்வுப் புத்தகம் தனித்தனியே பராமரிக்க வேண்டும்.

28. தங்கும் விடுதியில் அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதர கேடு விளைவிக்கும் பொருட்கள் பயன்படுத்தக்கூடாது.

29. தங்கும் விடுதி சுகாதாரமாகவும், எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் பராமரிக்க வேண்டும். அறைகள் ஆன்–லைன் மூலமாகவும் அல்லது நேரில் பதிவு செய்வதற்கான பதிவு புத்தகம் பராமரிக்க வேண்டும்.

30. அறைகளில் உரிமதாரரின் சொந்தப்பொறுப்பில் கேமரா பொருத்தப்பட்டு பதிவுகள் செய்யப்பட்டு வரவேண்டும். காவல்துறையால் அல்லது நகராட்சி அதிகாரிகளால் (Footage ) பதிவுகள் கோரும் போது அளிக்க வேண்டும்.

31. நகராட்சிக்கு தேவைப்படும் போது உரிமத்தை ஆட்சேபணையில்லாமலும் நஷ்ட ஈடு எதுவும் கேட்காமலும் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

32. சொத்து மதிப்பு சான்றுடன் நாளது தேதிவரை மேற்படி சொத்தில் வில்லங்கம் ஏதுமில்லை என்பதற்கான வில்லங்கச்சான்று அளிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| | **33.** ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்தும் காலத்தில் உரிமத்தை இடையில் ஒப்படைத்தால் செலுத்திய தொகை முழுவதும் பறிமுதல் செய்து மறுஏலம் விடப்படும். மறு ஏலம் விடுவதால் நகராட்சிக்கு ஏற்படும் இழப்பு முழுவதையும் முந்தைய உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.<br>**34.** உரிமம் எடுத்தவர் மட்டுமே உரிம இனத்தை நடத்த அனுமதிக்கப்படும். உள் குத்தகைக்கு விடப்பட்டாலோ அல்லது வேறு புகார்கள் வரப்பெற்றாலோ எவ்வித அறிவிப்பும் இன்றி உரிமம் இரத்து செய்யப்படும். செலுத்திய தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும்.<br>**35.** அந்தந்த உரிம காலங்களுக்குரிய வருவமான வரி, ஜி.எஸ்.டி. செலுத்தியதற்கான அறிக்கை மற்றும் உரிம முழுத்தொகையும் பிப்ரவரி மாதம் செலுத்திய பிறகே ஒவ்வொரு ஆண்டும் உரிமம் அனுபவிக்க உத்திரவு பிறப்பிக்கப்படும்.<br>**36.** ஒவ்வொரு ஆண்டும் உரிமதாரர் ஏப்ரல் மாதத்தில் சொத்து மதிப்பு சான்றுக்கான வில்லங்கம் சான்று உரிய துறையிடமிருந்து பெற்று சமர்பிக்க வேண்டும்.<br>**37.** இந்நகராட்சியின் **2018–2021**ஆம் ஆண்டு பொது ஏல மற்றும் ஒந்தப்புள்ளி அறிக்கையில் உள்ள பொது நிபந்தனைகள் ,சிறப்பு நிபந்தனைகளை தனி இனத்தின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.<br>**38.** இந்த இனத்தின் குத்தகைதாரர் மற்றும் ஏலத்தாரர் நகராட்சி, மத்திய மற்றும் மாநில அரசுகளின் சட்ட திட்டத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்களுக்கு செல்லக்கூடாது. அவ்வாறு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும்.<br>**39.** ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு மட்டுமே வாடகை வசூலிக்க அனுமதிக்கப்படும். | |
| 23. | கும்பகோணம் நகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் Street Light Ladder வண்டி எண் TN 49/U2266க்கு தகுதிச் சான்று பெறவேண்டியுள்ளதால், வண்டியில் கீழ்க்கண்ட பழுது பணிகள் செய்ய வேண்டியுள்ளது.<br>1. Gear Box Service<br>2. Clutch plate Re-condition<br>3. Engine Oil Service<br>4. Battery Charge<br>5. Battery wire leg replace<br>6. Head Light Check up<br>7. Hydraulic oil Full-up<br>8. Seat Repair<br>9. Painting<br>10. Tyre with Tube<br>மேற்கண்ட பழுது பணிகள் செய்வதற்கு செலவினத் தொகை சுமார் மதிப்பு ரூ.**115000/–** ஆகும்.<br>மேலும், இயக்குநர், தமிழ் நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை அவர்களின் ந.க. எண் ஆ**4/1160/11–1** Major பழுது **2018–2020** நாள் **02.11.2018** கடிதத்தின்படி M/s. SHIV MOTORS, No.3701/3 சென்னை சாலை கும்பகோணம் நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையினரால் அங்கீகாரம் பெற்ற மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.243**<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது. |
| 24. | கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.**40**, மகாமகக்குளம் மேல்கரையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பயணியர் விடுதி (Dormitory Building) கட்டிடத்தின் பராமரிப்பு பொறுப்புகளை ஏற்று கட்டிடத்திலுள்ள அறைகளை வாடகைக்கு விட்டு மற்றும் தரைத்தளத்தில் சிற்றுண்டி விடுதிக்கான கூடுதல் வசதிகளை சொந்த செலவில் மேற்கொண்டு சிற்றுண்டி விடுதி நடத்திக்கொள்ளும் உரிமம் தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. **50000/–** மன்றத்தின் அனுமதிக்கு | **தீர்மான எண்.244**<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது. |
| 25. | இந்நகராட்சிக்கு சொந்தமான நேரு மொத்த காய்கறி அங்காடி அறிஞர் அண்ணா சில்லறை காய்கறி அங்காடியில் உள்ள கடைகளில் தினசரி வாடகை மற்றும் நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிம இனம் சென்ற ஆண்டு **3.26** கோடி ஏலம் சென்றுள்ளதாலும் **01.04.2019** முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு தற்போது கூடுதலாக ஏலம் போக வாய்ப்புள்ளதாலும் இந்நகர்மன்ற | **தீர்மான எண்.245**<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 15.12.2017ஆம் தேதிய தீர்மான எண்.369ல் இந்த இனத்திற்கு வைப்புத்தொகை ரூ.15,00,000 ஒப்புதல் அளிக்கப்பட்டதை ரூ.50,00,000 மாக உயர்த்தி வைப்புத்தொகை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு. | |
| 26. | பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் நிலையங்கள், கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள், ஆளிறங்கும் தொட்டிகள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு 22.07.2013 அன்று வரப்பெற்ற M/s. InfraEn Consulting Pvt., Ltd., பெங்களூரு நிறுவத்தாருக்கு மூன்றாண்டுகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் பார்க்கப்பட்டு வந்தன. ஒப்பந்த ஷரத்துகளின்படி இப்பணியினை மூன்றாண்டுகள் வரை கால நீட்டிப்பு செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தகாலம் 18.09.2016 உடன் முடிவடைந்த பொழுது தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்த காரணத்தினால் ஒப்பந்த பத்திரம் பக்க எண் 18 சரத்து 23ன்படி மேற்கண்ட நிறுவனத்தார் மூலமே முதற் கட்டமாக மூன்று மாதங்களுக்கும், பின்னர் நகர் மன்ற தீர்மானம் எண் 93 நாள் 31.01.2017ன்படி 19.12.2016 முதல் ஓராண்டு காலத்திற்கும், நகர் மன்ற தீர்மானம் எண் 413 நாள் 28.02.2018ன்படி 19.12.2017 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கும் பணி நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது. இதன்படி அனுமதி காலம் 18.12.2018 உடன் முடிவடைகிறது. ஆதலால், இப்பணியினை ஏற்கனவே பார்த்து வரும் M/s. InfraEn Consulting Pvt., Ltd., பெங்களூரு என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 334 நாள் 25.10.2013ன்படி அனுமதி அளிக்கப்பட்ட ஒப்பந்த விதிமுறை (Preparation of Bid, Class 23 & Section-II, Part I – 2ன்படி 19.08.2013ம் தேதியிட்ட ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டு 19.09.2016 முதல் 18.09.2019 வரையுள்ள மூன்றாண்டு காலத்தில் ஏற்கனவே மேற்கண்ட விபரப்படி அனுமதி வழங்கப்பட்ட காலங்கள் போக 19.12.2018 முதல் 18.09.2019 முடிய கால நீடிப்பு செய்து மேற்கண்ட நிறுவனத்தார் மூலமே ஒப்பந்த விலை விகிதப்படி பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் நிலையங்கள், கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள், ஆளிறங்கும் தொட்டிகள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மான எண்.246**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**